FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2016

## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | வணிகக்கல்வி – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :....................................

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.*
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- *01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

01) வணிகத்தை வகைப்படுத்தும் நியதி அல்லாதது எது?
(1) உற்பத்தித் தன்மை அடிப்படையில்
(2) உற்பத்தித்துறை அடிப்படையில்
(3) அளவின் அடிப்படையில்
(4) வாழ்தன்மை அடிப்படையில்
(5) நோக்கத்தின் அடிப்படையில் (.......)

02) விவசாயம், மீன்பிடி, சுரங்கமறுத்தல் போன்றவற்றை உள்ளடக்கும் உற்பத்திக்கு வழங்கும் பெயர்
(1) விவசாய உற்பத்தி
(2) கைத்தொழில் உற்பத்தி
(3) முதனிலை உற்பத்தி
(4) இரண்டாம் நிலை உற்பத்தி
(5) மூன்றாம் நிலை உற்பத்தி (.......)

03) ''வணிகம்'' எனும் பதத்திற்கு மிகப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க.
(1) இலாபமீட்டுவதை நோக்கிற் கொண்ட செயற்பாடு எதுவும்
(2) மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட செயற்பாடு எதுவும்
(3) விலைக்கு வாங்குதலுடனும் விற்றலுடனும் சம்பந்தப்பட்ட செயற்பாடு எதுவும்
(4) பண்டங்களினதும் சேவைகளினதும் பரிமாற்றத்துடன் சம்பந்தப்பட்ட செயற்பாடு எதுவும்
(5) முதலீட்டாளர்களின் ஒரு பொருளாதாரச் செயன்முறை எதுவும் (.......)

04) பின்வருவனவற்றுள் மனித விருப்பத்தை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
(1) உணவு, உடை, வசிப்பிடம், பொழுதுபோக்கு
(2) உடை, சோறு, கல்வி, மருந்து
(3) மோட்டார் வாகனம், சோறு, பாடசாலை, பத்திரிகை
(4) மோட்டார் வாகனம், பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி

(5) கல்வி, போக்குவரத்து, பாடசாலை, பத்திரிகை ( .......)

05) பல்வேறு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கு ஏதுவான காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - இலாபம்
B - தொழில் பாதுகாப்பு
C - சந்தைப்பங்கு
D - பதவி உயர்வு
E - தொழில் அபிவிருத்தி
F - வேலையில் திருப்தி
G - வணிகத்தின் வளர்ச்சி
H - சம்பளம்

மேலுள்ளவற்றுள் வணிகத்தின் மீது ஊழியர்கள் மட்டும் அக்கறை கொள்வதற்கான காரணங்களை உள்ளடங்கிய தொகுதியை தெரிவு செய்க.

(1) B, D, E, H (2) D, E, F, H (3) A, B, C, F (4) B, E, F, H (5) B, D, F, H ( .......)

06) வணிகமொன்றினால் பல்வேறு பிரிவினர் தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - நியாயத்தன்மை
B - சமமாக நடத்தும் தன்மை
C - வரி செலுத்துதல்
D - தொழிலில் பாதுகாப்பு
E - சமூக நலனோம்புச் சேவைகள்
F - சுகாதார பாதுகாப்பு வசதிகள்

மேலுள்ளவற்றுள் வணிகமொன்றினால் ஊழியர்களிற்கு மட்டும் ஆற்றவேண்டிய சமூகப் பொறுப்புக்களை உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) A, B, E (2) B, E, F (3) A, D, F (4) D, E, F (5) B, D, F ( .......)

07) இலங்கை தரகட்டளைகள் நிறுவகம் ஆற்றிவரும் ஒரு சேவை அல்லாதது எது?
(1) தராசுகள் அளவிடும் கருவிகள் என்பவற்றிற்கு நற்சான்றளித்தல்
(2) ஏற்றுமதிக்கு முற்பட்ட பரிசோதனை
(3) நியமப்படுத்தல் தரப்படுத்தல் என்பவற்றை விருத்தி செய்தல்
(4) நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல்
(5) நுகர்வோர் கல்வியினைப் பிரசித்தப்படுத்தல் ( .......)

08) பங்குடைமை வணிகத்தின் பங்காளரொருவரது ஒரு கடமை
(1) வணிகக் கருமங்களில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளல்
(2) பங்குடைமை நடவடிக்கையில் பங்குபற்றுதல்
(3) வணிகத்தின் கணக்குகளை அறிந்து கொள்ளல்
(4) இலாபங்களை பகிர்ந்து கொள்ளல்
(5) இட்ட மூலதனத்திற்கு வட்டி பெறுதல் ( .......)

09) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றில் மாத்திரம் காணக்கூடிய பண்பொன்றாக இருப்பது
(1) நீண்ட வாழ்வுத் தன்மை காணப்படலும், வரையறுக்கப்பட்ட பொறுப்பும்.
(2) பங்குகளை சுதந்திரமாகக் கைமாற்ற முடிதலும், உச்சப் பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப் படாதிருத்தலும்.
(3) பங்குகளை சுதந்திரமாகக் கைமாற்ற முடியாதிருத்தலும், வரையறுக்கப்பட்ட பொறுப்பும்.
(4) வரையறுக்கப்பட்ட பொறுப்பும், பங்குகளையும் தொகுதிக் கடன்களையும் பகிரங்கமாக வெளியீடு செய்ய முடியாமை
(5) உச்சப் பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருத்தலும், நீண்ட வாழ்வுத் தன்மையொன்று காணப்படலும் ( .......)

10) அங்கீகார வணிகம் ஒன்றின் மூலம் அங்கீகாரம் பெற்ற வணிகர் ஒருவருக்குக் கிடைக்கும் அனுகூலம் பின்வருவனவற்றுள் எது?
(1) அங்கீகார நிறுவனத்தின் கட்டளைக்கு அமைய செயற்பட வேண்டும்.
(2) இலாபத்தின் ஒரு பகுதி தனியுரிமைக் கட்டணமாக செலுத்த வேண்டும்.
(3) அங்கீகார உடன்படிக்கையொன்றைப் பெறுதல்.
(4) வணிகத் தீர்மானங்களை எடுத்தல் இலகுவாதல்.

(5) குறைந்தளவு இடர் காணப்படும். ( .......)

11) வணிகங்கள் சில அரசதுறையின் கீழ் வைத்திருக்கப்படுவதற்கான ஒரு பிரதான காரணம்
(1) அரசாங்கத்திற்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ள
(2) கூடுதலான தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்
(3) பொது மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு
(4) வள விரயங்களைக் குறைப்பதற்கு
(5) உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு ( .......)

12) முயற்சியாண்மை தேர்ச்சிகளும், தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கான வழிகளில் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.
A - பயிற்சியும் கல்வியும்
B - இடரை ஏற்றலும் சந்தர்ப்பங்களை இனம் காணலும்
C - சுதந்திரமானதும் அர்ப்பணிப்புடையதும்
D - சுய மதிப்பீடும் அனுபவங்களும்
E - நேர் மனப்பாங்கும் தூரநோக்கும்
இவற்றில் முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை விருத்தி செய்யக்கூடிய வழிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியை தெரிவு செய்க.
(1) A, B (2) A, D (3) B, E (4) A, E (5) D, E ( .......)

13) இலங்கை மத்திய வங்கியின் சில தொழிற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.
A - அந்நிய செலாவணிக் கட்டுப்பாடு
B - நாணயக் கொள்கைகளை அமுல்படுத்தல்
C - அரச கடன் முகாமைத்துவம்
D - அரசாங்கத்தின் பொருளாதார அறிவுரைஞராகத் தொழிற்படல்
E - நாணயமாற்று வீதங்களை அமுலாக்கல்
F - ஊழியர் சேமலாபநிதியை முகாமைத்துவம் செய்தல்
மேலே தரப்பட்ட தொழிற்பாடுகளுள் இலங்கை மத்திய வங்கி தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு மேற்கொள்ளும் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
(1) B, D, F (2) A, C, F (3) B, C, E (4) B, D, E (5) D, E, F ( .......)

14) காசோலைக் கொடுக்கல் வாங்கலில் சம்பந்தப்படாத தரப்பினர் பின்வருவோருள் யார்?
(1) ஏற்றுக்கொள்பவர்
(2) பிறப்பிப்பவர்
(3) கட்டளையைப் பெறுபவர்
(4) பணம் பெறுபவர்
(5) சாட்டுதல் செய்பவர் ( .......)

15) காப்புறுதித் தத்துவங்கள் சில கீழே தரப்படுகின்றன.
A - இழப்பீடு
B - மிக்குயர் நம்பிக்கை
C - பதிவாள் வைப்பு
D - பங்களிப்பு
E - காப்புறுதி செய்யும் உரிமை
F - அண்மைக் காரணித் தத்துவம்
மேலே தரப்பட்டவற்றுள் ஆயுட் காப்புறுதி உட்பட சகல காப்புறுதிகளுக்கும் பிரயோகிக்கப்படத்தக்க காப்புறுதித் தத்துவங்களைக் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) A, C, E (2) B, C, F (3) B, E, F (4) A, C, F (5) D, E, F ( .......)

16) பின்வருவனவற்றுள் எது வணிகர் ஒருவருக்கு நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுவதன் அனுகூலம் அல்ல?
(1) காசோலை மூலம் கொடுப்பனவுகள் செய்யப்பட முடியும்.
(2) மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட முடியும்.
(3) நாளாந்த மீதிக்கு வட்டி பெறப்பட முடியும்.
(4) நேரடி வைப்புக்களை மேற்கொள்ளக்கூடிய வசதி

(5) நிலையியற் கட்டளை வசதி (.......)

17) வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த ஒரு காரணி அல்லாதது எது?
(1) நேரில் உற்பத்தி
(2) உற்பத்தியில் மிகை
(3) உற்பத்திக் கிரயம்
(4) பூகோள மயமாதல்
(5) வர்த்தக ஒப்பந்தங்கள் (.......)

18) இலத்திரனியல் வியாபாரம் ($e.trade$) தொடர்பான உண்மையல்லாத கூற்று பின்வருவனவற்றுள் எது?
(1) வாங்குவோன் பண்டங்களை நேருக்கு நேர் பரிசீலிக்க முடியும்.
(2) போட்டியாளர் பண்டங்களுடன் ஒப்பிடமுடியும்.
(3) வாங்குவோன் பண்டங்களை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.
(4) ஒப்பீட்டளவில் பொருட்களுக்கான குறைந்த விலை மட்டம்.
(5) பயன்படுத்தப்படும் ஆவணங்கள் குறைவாக இருத்தல். (.......)

19) முகாமையாளர்களது வகிபாகங்கள் சில கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| A - கண்காணிப்பாளர் | F - மேலதிகாரி |
| B - முயற்சியாளர் | G - வளங்களை ஒதுக்கீடு செய்பவர் |
| C - தகவல்களை வழங்குபவர் | H - பிரச்சினைகளைக் கையாள்பவர் |
| D - தலைவர் | I - தொடர்புகளைப் பேணுபவர் |
| E - உத்தியோகபூர்வ பேச்சாளர் | J - நடுநிலையாளர் |

மேலே தரப்பட்டவற்றுள் முகாமையாளர்களுடைய தீர்மான வகிபாகத்தை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?
(1) A, B, D, G (2) B, G, H, J (3) B, C, F, G (4) B, D, G, J (5) C, E, F, G (.......)

20) ஓர் ஒழுங்கான கட்டுப்பாட்டுச் செயல்முறையின் முதற்படி
(1) செயற்பாட்டு விளைவுகளை அளவீடு செய்தல்
(2) செயற்பாட்டு பெறுபேற்றினை நியமங்களுடன் ஒப்பிடுதல்
(3) மதிப்பீடு செய்தலும் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்
(4) செயல் நிறைவேற்ற நியமங்களை உருவாக்கல்
(5) பின் தொடர்தலும் பின்னூட்டலும் (.......)

21) பெறுமானம் தேவைப்படும் இடப்பரப்பு என்பவற்றின் அடிப்படையிலான இருப்புக் கட்டுப்பாட்டு முறை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) சிக்கனக் கட்டளைக் கணியம்
(2) பந்தாய அட்டை முறைமை
(3) இரு கொள்கலன் முறைமை
(4) $ABC$ பகுப்பாய்வு
(5) இருப்பு மட்டங்கள் (.......)

22) ஒரு புத்தகத்தை அச்சிடுவதற்கு ஓர் அச்சாளருக்கு ஏற்பட்ட நிலையான கிரயம் ரூபா 12000 ஆகும். புத்தகம் ஒன்றிற்கான கிரயங்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| அச்சிடற் கிரயம் | = 3 ரூபா |
| நூலாசிரியர் தனியுரிமைக் கட்டணம் | = 2 ரூபா |
| விற்பனை தரகு | = 1 ரூபா |

புத்தகம் ஒன்றின் விற்பனை விலை ரூபா 10 ஆகும். பிரதிகளின் சமப்பாட்டு எண்ணிக்கை யாது?
(1) 1200 பிரதிகள்
(2) 2000 பிரதிகள்
(3) 3000 பிரதிகள்
(4) 4000 பிரதிகள்

(5) 5000 பிரதிகள் ( .......)

23) சின்னங்களை இடுவதனால் வாடிக்கையாளருக்கு மட்டும் கிடைக்கும் நன்மைகளின் தொகுதியைத் தெரிவு செய்க.

A - கட்டளைகளைப் பெறும் போது இலகுவாகயிருத்தல்

B - சட்ட ரீதியான பாதுகாப்பினைப் பெறுதல்

C - இலகுவாகப் பொருட்களைத் தெரிவு செய்ய முடிதல்

D - பக்கச்சார்பொன்றினை உருவாக்க முடிதல்

E - முறைப்பாடுகளை முன்வைக்க இலகுவாக அமைதல்

F - போலிப் பொருட்களிலிருந்து பாதுகாப்பு பெறமுடிதல்

(1) B, C, F (2) A, C, D (3) C, D, E (4) C, D, F (5) C, E, F ( .......)

24) உயர்தரமான பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை மக்கள் தாங்கக்கூடிய விலையில் விற்கும் எண்ணக்கருவிற்கு வழங்கும் பெயர்

(1) உற்பத்தி எண்ணக்கரு
(2) உற்பத்தி பொருள் எண்ணக்கரு
(3) விற்பனை எண்ணக்கரு
(4) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
(5) சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு ( .......)

25) பின்வரும் தொகுதிகளுள் நிதியிடல் தீர்மானங்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) சரக்கிருப்புக்கள், கடன்பட்டோர், காசு மற்றும் அட்டுறு செலவுகள் மீதான தீர்மானங்கள்
(2) பங்கு மூலதனம், கடன் மூலதனம், பங்கிலாபங்கள் மற்றும் வணிக விரிவாக்கம் என்பவற்றின் மீதான தீர்மானங்கள்
(3) நிலையான சொத்துக்கள், காசு, சரக்கிருப்புக்கள் மற்றும் கடன்பட்டோர் மீதான தீர்மானங்கள்
(4) கடன் கொடுத்தோர், பங்கு மூலதனம், பங்கிலாபங்கள் மற்றும் அட்டுறு செலவுகள் மீதான தீர்மானங்கள்
(5) கடன் கொடுத்தோர், பங்கு மூலதனம், காசு மற்றும் அட்டுறு செலவுகள் மீதான தீர்மானங்கள் ( .......)

26) பின்வருவனவற்றுள் எது ஆட்சேர்ப்பு தெரிவு செய்தற் செயற்பாட்டு நடைமுறையொன்றாக அமையாதது

(1) வேலை விபரணங்களை வடிவமைத்தல்
(2) விண்ணப்பங்களைத் தயாரித்தல்.
(3) விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை வைத்தல்.
(4) பொருத்தமான நபர்களைத் தெரிவு செய்தல்.
(5) பயிற்சியளித்தலும் அபிவிருத்தியும் ( .......)

27) ஒரு பொருளின் உற்பத்திக்கு மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதில் கருத்திற் கொள்ளப்படாத ஒரு காரணி

(1) மூலப்பொருளின் தரம்
(2) மூலப்பொருளின் விலை
(3) வழங்குநரின் நிதி நிலைப்பாடு
(4) ஒப்பந்தக் காலம்
(5) கொடுப்பனவு நிபந்தனைகள் ( .......)

28) நாளாந்த வணிகச் செயற்பாடுகளைக் கையாளும் ஒரு தகவல் முறைமை

(1) முகாமைத்துவ தகவல் முறைமை $(MIS)$
(2) நிறைவேற்று உரிமை முறைமை $(ESS)$
(3) தீர்மான உதவி முறைமை $(DSS)$
(4) கொடுக்கல் வாங்கல் செயன்முறைமை $(TPS)$

(5) அறிவுச் செயல்முறைமை $(KWS)$ ( .......)

29) பின்வருவனவற்றுள் சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படாத ஒரு உருப்படி
(1) தொழிற்சாலை சந்தை என்பவற்றின் பகுப்பாய்வு
(2) மூலப்பொருட்களின் தேவைப்பாடுகள்
(3) போட்டி நிலைமைகளின் பகுப்பாய்வு
(4) சந்தைப்படுத்தல் செலவு
(5) போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாய முறைகள் ( .......)

30) வெளியகப் பிரிவினரை இலக்காகக் கொண்ட வணிகத் திட்டமொன்றின் மிகவும் முக்கியமான பகுதி
(1) வணிக விபரணம்
(2) நிதித்திட்டம்
(3) மனித வளத்திட்டம்
(4) நிறைவேற்றுச் சுருக்கம்
(5) இவற்றுள் எதுவுமில்லை

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக.**

31) வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளினூடாக ............................................................ உம் ............................................................ உம் இனம் காணப்படுவதுடன் புறச்சூழல் காரணிகளினூடாக ............................................................ உம் ............................................................ உம் இனம் காணப்படும்.

32) (அ) வரி வருமானங்களானது ............................................................ கீழ் வகைப்படுத்தப்படுவதுடன் மீண்டெழும் செலவுகள் ............................................ கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.
(ஆ) ............................................................ மற்றும் ............................................................ என்பன ஒரு உற்பத்திப் பொருள் தொடர்பாகக் கேள்வியை உருவாக்கும் இரு காரணிகள் ஆகும்.

33) (அ) இலாபம் வணிகத்தின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி என்பவற்றிற்காக வணிகம் தொடர்பாக அக்கறையுடையவர் ஒரு ............................................................ எனப்படுவார்.
(ஆ) வருமானவரி மற்றும் மூலதன இலாபவரி ஆகியவை ............................................................ வரியாக கருதப்படுவதுடன், சுங்கவரி மற்றும் உற்பத்திவரி ஆகியவை ............................................................ வரி ஆகக் கருதப்படுகின்றன.

34) (அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு ஆனால் இலங்கையில் வணிகம் நடத்துவதற்கு உரித்துனைப் பெறாக் கம்பனி ............................................................ என அழைக்கப்படும்.
(ஆ) முயற்சியாண்மையின் நவீன போக்குகள் இரண்டாக ............................................................, ............................................................ ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

35) (அ) தொழிற்சாலை ஒன்றினுள் வேலை ஆரம்பமாகும் முடியும் நேரத்தினை ஊழியர்களுக்கு அறிவிப்பதற்கு பயன்படுத்தப்படும் மணி ஒலி ஒரு ............................................................ என அழைக்கப்படுவதுடன் ............................................................ தொடர்பாடல் முறையாகக் கருதப்படும்.
(ஆ) இலங்கையில் காணப்படும் இரண்டு தரப்படுத்தல் $(Credit\ rating)$ கம்பனிகள் ............................................................ உம் ............................................................ உம் ஆகும்.

36) (அ) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உரிமையினைத் தெரிவிப்பதற்கு இறக்குமதியாளனால் சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுவது ............................................................ என அழைக்கப்படும்.
(ஆ) ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் விபரம், விலை, கொடுப்பனவு நிபந்தனை, போக்குவரத்துப்பாதை என்பவற்றை உள்ளடக்கிய ஆவணமானது ............................................................ என அழைக்கப்படும்.

37) (அ) ஹென்றி மின்ஸ்பர்க் இனால் அறிமுகப்படுத்தப்பட்ட முகாமையாளர்களது பிரதான வகிபாகங்கள் .................................................. உம் ...................................................... உம் ஆகும்.

(ஆ) குழு உறுப்பினர்களது தொழிலுடன் தொடர்புடைய கருமங்களுக்கு வழிகாட்டி, செல்வாக்குச் செலுத்தும் செயல்முறை ........................................................................................ என அழைக்கப்படும்.

38) (அ) மூலப் பொருட்களையும் முடிவுப் பொருட்களையும் பூச்சியமாகப் பேணி களஞ்சியக் கிரயத்தினை இழிவுபடுத்தும் முறை ................................................................... என அழைக்கப்படும்.

(ஆ) நிறுவனத்தின் சகல மட்டங்களிலும் தரத்தினைப் பேணும் செயற்பாடு .............................................. என அழைக்கப்படும்.

39) (அ) நுகர்வோரின் தேவை விருப்பங்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களாக 1. ............................................................... 2. .............................................................. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

(ஆ) வணிக நிறுவனத்தின் எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்குச் செயற்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் உபாயங்கள் ...................................................................... என அழைக்கப்படும்.

40) (அ) ........................................................................... மற்றும் ............................................................................... என்பன முகாமைத்துவ செயற்பாட்டின் அடிப்படையில் மனித வள தகவல் முறைமையின் உபமுறைகளாகும்.

(ஆ) வணிகத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு முன் முயற்சியாளரினுள் உருவாகின்ற மனநிலை ............................................................................. ஆகும்.

❖ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) வணிகத்தின் நவீன வளர்ச்சிப்போக்குகள் நான்கு எழுதுக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................
4. ..........................................................................................................................

42) (அ) சிறிய வணிகங்களுக்கு தொழில்நுட்பச் சேவைகளை வழங்கும் இரண்டு நிறுவனங்களை பெயரிடுக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................

(ஆ) வாடிக்கையாளரொருவருக்கு கிடைக்கக்கூடிய இரு வேறுபட்ட வகையான மேலதிகப்பற்று வசதிகளை எழுதுக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................

43) (அ) இலங்கை அரசாங்கம் கடன்களைப் பெறுவதற்கு பயன்படுத்தும் மூலதனச் சந்தைக் கருவிகள் இரண்டைப் பெயரிடுக.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................

(ஆ) பங்கு ஒப்புறுதி சேவையை வழங்கும் நிதி நிறுவகங்கள் இரண்டு தருக.

1. ..........................................................................................................................

2. ........................................................................................................................................................

44) பின்வரும் வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரே இலங்கையில் தற்போதைய நாணயமாற்று வீதங்களை இலங்கை ரூபாக்களில் தருக. (கிட்டிய ரூபாவில் தரப்படும் விடைகளும் ஏற்றுக் கொள்ளப்படும்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஐக்கிய அமெரிக்கா டொலர் | = | ரூபா | ........................................ | சதம் | ................................ |
| 2. | ஐக்கிய இராச்சியம் | = | ரூபா | ........................................ | சதம் | ................................ |
| 3. | யூரோ | = | ரூபா | ........................................ | சதம் | ................................ |
| 4. | சுவிஸ்பிராங் | = | ரூபா | ........................................ | சதம் | ................................ |

45) பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிதி நிறுவனங்ககள் நான்கு தருக.

1. ........................................................................................................................................................
2. ........................................................................................................................................................
3. ........................................................................................................................................................
4. ........................................................................................................................................................

46) சிறு வணிகர்களினால் எதிர்நோக்கப்படும் பொதுவான பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ........................................................................................................................................................
2. ........................................................................................................................................................
3. ........................................................................................................................................................
4. ........................................................................................................................................................

47) உற்பத்தித்திறன் அதிகரித்துக் கொள்ளக்கூடிய நவீன தொழில்நுட்ப முறைகள் நான்கினை எழுதுக.

1. ........................................................................................................................................................
2. ........................................................................................................................................................
3. ........................................................................................................................................................
4. ........................................................................................................................................................

48) பணச்சந்தையின் உபசந்தைகள் நான்கினை எழுதுக.

1. ........................................................................................................................................................
2. ........................................................................................................................................................
3. ........................................................................................................................................................
4. ........................................................................................................................................................

49) (அ) ஊழியர்கள் தங்களது உரிமைகளை பெறும் இரண்டு மூலங்களைக் குறிப்பிடுக.

1. ...................................................................... 2. ......................................................................

(ஆ) தொழில் இசைவாக்கத்திற்கு பயன்படுத்தப்படும் வேறுபட்ட முறைகள் இரண்டு தருக.

1. ...................................................................... 2. ......................................................................

50) (அ) நிறுவன ரீதியான தகவல்களுடன் தொடர்புடைய பின்வரும் சொற்குறுக்கங்களின் பொருளை எழுதுக.

1. ESS : ........................................................................................................................................
2. TPS :........................................................................................................................................

(ஆ) வணிகத்திட்டம் தயாரிப்பதன் இரண்டு அனுகூலங்களைத் தருக.

1. ........................................................................................................................................................

2. ........................................................................................................................................................................................................

The National e-learning Portal for The General Education